**கவனிக்க.**- 27.09.2024 ஆந் திகதிய 2404 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வரத்தமானியின் பகுதி II, பகுதி III : மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


**අංක 2405 - 2024 ඔක්තෝබර් මස 04 වැනි සිකුරාදා - 2024.10.04**

2405 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 982 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 985 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஒற்றோபர் மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## இப்பாகமுவ பிரதேச சபை

வினோத வரி விதித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்வினை ஒழுங்குவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான வினோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் உட் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்.*

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத்திற்கான வினோத வரி (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான வினோத வரி கட்டளைச் சட்டத்தில் அறிவிக்கப்பட்ட வினோத நடவடிக்கைகளுக்காக அறவிடப்படுகின்ற நுழைவுக் கட்டணத்தில் 10% ஆம் வினோத வரியினை விதித்து அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச்சட்டத்தில் 9(3) ஆம் உட் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான வினோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் உட்பிரிவின்படி இப்பாகமுவ பிரதேச சபையின் செயலாளரினால் 2024.03.05 ஆந் திகதி 1122 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிட்டு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை வடமேல் மாகாணத்தின் ஆளுநர் நசீர் அஹமட் ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்வினை ஒழுங்குவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான வினோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் உட் பிரிவின்படி இப்பாகமுவ பிரதேச சபையின் செயலாளரினால் 2024.03.05 ஆந் திகதி 1122 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிட்டு எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை வடமேல் மாகாணத்தின் ஆளுநர் நசீர் அஹமட் ஆகிய நான் 1989 ஆம் ஆண்டு 12 ஆம் உட் பிரிவின் ஒழுங்கு விதிகளுக்கமைய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி அங்கீகரிக்கப்பட்டது என்பதை இதன்மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*நசீர் அஹமட்,*
*வடமேல் மாகாண ஆளுநர்.*

*வடமேல் மாகாண ஆளுநரது அலுவலகம்,*
*2024 ஆவணி 27.*

### *தீர்மானம்*

*" 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சட்டத்தில் 9(3) ஆம் உட்பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கத்திற்கான வினோத வரி (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான வினோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் உட் பிரிவினால் இப்பாகமுவ பிரதேச சபையின் செயலாளர் ஆகிய எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி இப்பாகமுவ பிரதேச சபையின் நிருவாக எல்லையினுள் நடாத்திச் செல்லப்படும் உரிய கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு வினோத நடவடிக்கைக்கு உள்நுழைவதற்காக செய்யப்படும் கட்டணத்தில் நூற்றிற்கு பத்து வீதத்திற்கு (10%) சமமான வரியினை விதித்து அறவிடவேண்டும் என்றும், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான மாகாண சபை (இடைநேர்வினை ஒழுங்குவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத்திற்கான வினோத வரி கட்டளைச் சட்டத்தின் 2(2) ஆம் உட் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கமைய கௌரவ வடமேல் மாகாண ஆளுநர் அவர்களது அங்கீகாரத்துடன் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், முன் கூறிய வர்த்தமானியில் வெளியிடப்படும் மாதத்தை தொடர்ந்து அடுத்த மாதம் முதல் திகதியில் இருந்து நடைமுறைக்கு வர வேண்டும் என்றும் நான் தீர்மானிக்கின்றேன்"*

*09-16*

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை**

ஆதன மதிப்பீட்டு ஏடு காட்சிப்படுத்தல் மற்றும் ஆட்சேபனை தெரிவித்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது மற்றும் 141(3) ஆவது பிரிவுகளின் கீழ் பிரதேசசபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள பளைநகர வட்டாரத்திற்கான அனைத்து வதிவிட, வர்த்தக கட்டடங்கள், காணிகள், வீடுகள் போன்ற நிலையான சொத்துக்களின் வருடாந்த மதிப்பை பதிவு செய்துள்ள மதிப்பீட்டு ஏடானது 20.09.2024 ஆந் திகதி தொடக்கம் 20.10.2024 ஆந் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.00 வரையான காலப்பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமையலுவலகத்தில் கட்டணங்கள் எதுவுமின்றி பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*குறித்த ஆதனங்களின் வருடாந்த மதிப்பீடு தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை இருப்பின் குறித்த கால எல்லைக்குள் "செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது அலுவலக நாட்களில் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி.ப. 4.00 மணி வரையிலான காலத்தினுள் நேரடியாக சமர்ப்பிக்கமுடியும் என்பதனையும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் ஆட்சேபனைகள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.*

*மேலும் குறித்த வட்டார ஆதனங்களின் மதிப்பீட்டு ஏட்டில் வருடாந்த மதிப்பீடு தொடர்பான விபரங்களை பார்வையிடுவதற்கு காணியின் உரிமையாளருக்கு அல்லது சட்டபூர்வமான குடியிருப்பாளருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்பதனை விசேடமாக தெரிவிப்பதுடன் மதிப்பீட்டு பதிவேட்டை பார்வையிடுவதற்காக வருவோர் தத்தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவது கட்டாயமாகவும் கருதப்படுகிறது.*

*த. தர்சினி,*
*செயலாளர்,*
*பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,*
*பளை.*

*10-17*

---

**கொபெய்கனே பிரதேச சபை**

*வரவு செலவுத்திட்ட வரைவு - 2025*

*கொபெய்கனே பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட ஆவணம் 2024 ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி முதல் 2024 ஒற்றோபர் 25 ஆந் திகதி வரை (அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினங்கள் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் கொபெய்கனே பிரதேச சபை அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனை பொருட்டு வைக்கப்பட்டுள்ளது என்பதனை பிரதேச சபை வரவு செலவுத்திட்டத் தயாரித்தல் மற்றும் வலுப்படுத்தல் விதிகளின் 10.2 (ஆ) ஆம் விதி பிரகாரம் பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*ஏ.எஸ். எம். பிரனாந்து,*
*செயலாளர்,*
*பிரதேச சபை,*
*கொபெய்கனே.*

*கொபெய்கனே பிரதேச சபை அலுவலகம்,*
*கொபெயிகனே,*
*2024, செத்தெம்பர் 25.*

*10-23*

**ஆணமடுவ பிரதேச சபை**

பொருட்டு வரைவுசெய்யப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஆவணம் - 2025

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் வடமேல் மாகாண கௌரவ ஆளுநரால், 2020.10.29 ஆந் திகதிய 2199/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிரதேச சபை வரவுசெலவுத்திட்டத்தை தயாரித்தல் மற்றும் அமுலாக்கல் விதி இலக்கம் 10(2) பிரகாரம், 2025 ஆம் ஆண்டு பொருட்டு ஆணமடுவ பிரதேச சபையினால் தயாரிக்கப்பட்ட வரைவுசெய்யப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஆவணமானது, 2024.10.07 ஆந் திகதி முதல் 2024.10.15 ஆந் திகதி வரை அரசாங்க வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் ஆணமடுவ பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.*

எச். ஜே.எம். எம். எஸ்.ஜயசுந்தர
செயலாளர்
ஆணமடுவ பிரதேச சபை.

*10-24*

---

**சிலாபம் பிரதேச சபை**

*வரவு செலவு திட்ட வரைவு - 2025*

*சிலாபம் பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஆவணம் 2024 ஒற்றோபர் மாதம் 7 ஆந் திகதி முதல் 2024 ஒற்றோபர் 16 ஆந் திகதி வரை (அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினங்கள் தவிர) அலுவலக நேரங்களில் சிலாபம் பிரதேச சபை அலுவலகத்தில் பொது மக்களின் பரிசீலனை பொருட்டு வைக்கப்பட்டுள்ளது என்பதனை சிலாப பிரதேச சபை வரவு செலவுத்திட்டத் தயாரித்தல் மற்றும் வலுப்படுத்தல் விதிகளின் 10.2 (ஆ) ஆம் பிரகாரம் பொது மக்களுக்கு இதனால் அறிவிக்கப்படுகிறது.*

*ஆர். எம். பி. என். ரணத்துங்க.
செயலாளர்
சிலாபம் பிரதேச சபை.*

*சிலாபம் பிரதேச சபை அலுவலகம்,
2024, ஒற்றோபர் 01.*

*10-41*

---

**பொல்பிதிகம பிரதேச சபை**

வரவு செலவுத்திட்ட சுருக்க வரைவு - 2025

பொல்பிதிகம பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டிற்காக ஒழுங்கமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டசுருக்க வரைவு 2024.10.07 ஆந் திகதி தொடக்கம் 2024.10.15 ஆந் திகதி வரை (சனி, ஞாயிற்று தவிர்த்து) அலுவலக நேரத்தினுள் பொல்பிதிகம பிரதேச சபை அலுவலகத்தில் மற்றும் பொல்பிதிகம கல்தங்வெவ மொரகொல்லாகம, சியம்பலங்காமுவ, மதஹபொல தலமல்கம பொது நூலகங்களிலும் பொதுமக்களுக்கு பரீட்சித்து பார்ப்பதற்கு வைக்கப்பட்டுள்ளது என்று பிரதேச சபை வரவு செலவு ஒழுங்கமைப்பு மற்றும் அமுலாக்கல் விதிகளில் 10(2) (ஆ) விதிப்படி பொதுமக்களுக்கு இத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஐ. எம். உதேனிகா மொஹொட்டி.
செயலாளர்
பொல்பிதிகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பொல்பிதிகம.

*10-48*

# நானாவித அறிவித்தல்கள்

## கிரிபாவ பிரதேச சபை

கைத்தொழில் வரி விதித்தல் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உட் பிரிவின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி கிரிபாவ பிரதேச சபையின் அதிகாரப் பணிகள், கடமைகளை நிறைவேற்றுகின்ற கிரிபாவ பிரதேச சபையின் செயலாளராகிய எச். எம். எஸ். ஹேரத் ஆகிய நான், குறித்த சட்டத்தின் 150 ஆம் பிரிவில் (1) ஆம் உட் பிரிவின் விதிகளுக்கு அமைய கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025 ஆம் ஆண்டிற்கு உரிய கைத்தொழில் வரியை விதித்தல் பின்வருமாறு விதிக்கப்பட வேண்டும் என்று 2024.09.09 ஆந் திகதிய 2019 ஆம் இலக்க தீர்மானத்தினால் தீர்மானித்துள்ளது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

எச். எம். எஸ். ஹேரத்,
செயலாளர்,
கிரிபாவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கிரிபாவ,
2024, செத்தெம்பர் 09.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நடாத்திச் செல்கின்ற இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணை I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கைத்தொழில் தொடர்பாக, அவ் அட்டவணையில் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள அளவில் கைத்தொழில் வரி 2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும் என்றும், உரிய கைத்தொழில் வரிக்கு உற்பட்டவர் 2025 ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் கிரிபாவ பிரதேச சபைக்கு செலுத்தப்பட வேண்டும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

### அட்டவணை

| நிரல் I | | நிரல் II | | |
|---|---|---|---|---|
| தொ. இல. | வியாரத்தின் தன்மை | இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் |
| | | ரூபா ச. | ரூபா ச. | ரூபா ச. |
| 1. | தேங்காய் மட்டை துண்டிட்டு (கடர்) செய்யும் வியாபாரத்தை கொண்டு நடாத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | குளிர்பானம் தயாரிக்கும் வியாபாரத்தை கொண்டு நடாத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 3. | அப்பியாசப் புத்தகம் தயாரிக்கும் வியாபாரத்தை கொண்டு நடாத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I வியாபரத்தின் தன்மை | நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் ரூபா ச. |
| 4. | பிளாஸ்டிக் நீர் தாங்கி தயாரிக்கும் வியாபாரத்தை கொண்டு நடாத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | குடிநீர் போத்தல் தயாரிக்கும் வியாபாரத்தை கொண்டு நடாத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 6. | மின்சார உதிரிப்பாகங்களை தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 7. | பாதணி தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 8. | மட்பாண்டம் தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 9. | ஆடைக் கைத்தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | அரிசி உற்பத்தி | 500.00 | 750.00 | 1,000.00 |
| 11. | கழுவும் திரவம் தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | மர அழகியல் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 13. | இறப்பரிலான கையுறை தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | விளையாட்டு பொருட்களை தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 15. | சங்கீத பொருட்களை தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 16. | காளான் உற்பத்தி தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. | தென்னம் தும்பு வெட்டும் இயந்திரம் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 18. | ஊதுபத்தி தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 19. | மின்குமிழ் தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 20. | நுளம்பு வலை தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 21. | மெத்தை தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 22. | பசாரு சிற்ப நிலையத்தை கொண்டு நடாத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 23. | தும்புத் தடி, விளக்குமாறு, கயிறு தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 24. | துணி கால் துடைப்பகம் மற்றும் கயிறு கால் துடைப்பகம் தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 25. | பை தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 26. | கல் நினைவுச் சின்னம் தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 27. | தாயம் தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 28. | விளக்கு திரியை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 29. | பப்படம் தயாரிக்கும் தொழில் | 500.00 | 750.00 | 1,000.00 |

*10-15/1*

---

**கிரிபாவ பிரதேச சபை**

வியாபார வரி விதித்தல் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உட் பிரிவின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி கிரிபாவ பிரதேச சபையின் அதிகாரப் பணிகள், கடமைகளை நிறைவேற்றுகின்ற கிரிபாவ பிரதேச சபையின் செயலாளராகிய எச். எம். எஸ். ஹேரத் ஆகிய நான், குறித்த சட்டத்தின் 152 ஆம் பிரிவில் (1) ஆம் உட் பிரிவின் விதிகளுக்கு

அமைய கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025 ஆண்டிற்கு உரிய வியாபார வரியை விதித்தல் பின்வருமாறு விதிக்கப்பட வேண்டும் என்று 2024.09.09 ஆந் திகதிய 2020 ஆம் இலக்க தீர்மானத்தினால் தீர்மானித்துள்ளது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

எச். எம். எஸ். ஹேரத்,
செயலாளர்,
கிரிபாவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கிரிபாவ,
2024, செத்தெம்பர் 09

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 152 ஆம் பிரிவின் (1) உட் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி உரிய சட்டத்தின் அல்லது அதன் கீழ் அமைக்கப்பட்ட துணை விதியின் கீழ் உரிமப்பத்திரத்தினை பெற்றுக் கொள்ளுதல் அல்லது அச் சட்டத்தின் 150 ஆம் பிரிவின் கீழ் ஏதாவதொரு வரித் தொகையினை செலுத்த தேவையற்றதும் ஏதாவதொரு வியாபாரத்தினை கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் 2025 ஆம் ஆண்டு கொண்டு நடாத்தி செல்கின்ற யாவரினாலும் உரிய வியாபாரத்தினால் முன்னைய ஆண்டு கிடைப்பனவு வருமானம் இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணை I ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள எல்லா வியாபாரங்களுக்காகவும் அவ் அட்டவணையில் II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள அளவில் வியாபார வரி 2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டும் என்றும், உரிய வியாபார வரிக்கு உட்பட்டவர் 2025 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் கிரிபாவ பிரதேச சபைக்குச் செலுத்தப்பட வேண்டும் என்று நான் தீர்மானிக்கின்றேன்.

**அட்டவணை**

| | நிரல் I | நிரல் II |
|---|---|---|
| தொ. இல. | வரி உரித்துடைய ஆண்டிற்கு முன் வியாபாரத்தினால் கிடைத்த அளவு | செலுத்த வேண்டிய வரி ரூ. ச. |
| 1. | ரூ. 6000.00 இற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் | இல்லை |
| 2. | ரூ. 6000.00 இற்கு மேற்பட்ட ரூ.12000.00 இற்கு மேற்படாத போது | 90.00 |
| 3. | ரூ. 12000.00 இற்கு மேற்பட்ட ரூ.18750.00 இற்கு மேற்படாத போது | 180.00 |
| 4. | ரூ. 18750.00 இற்கு மேற்பட்ட ரூ.75000.00 இற்கு மேற்படாத போது | 360.00 |
| 5. | ரூ. 75000.00 இற்கு மேற்பட்ட ரூ.150000.00 இற்கு மேற்படாத போது | 1200.00 |
| 6. | ரூ. 150000.00 இற்கு மேற்படுகின்ற சந்தர்ப்பத்தில் | 3000.00 |

10-15/2

---

**கிரிபாவ பிரதேச சபை**

உரிமப் பத்திரக் கட்டணம் விதித்தல் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவின் (3) ஆம் உட் பிரிவின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி கிரிபாவ பிரதேச சபையின் அதிகாரப் பணிகள், கடமைகளை நிறைவேற்றுகின்ற கிரிபாவ பிரதேச

*சபையின் செயலாளராகிய எச். எம். எஸ். ஹேரத் ஆகிய நான், குறித்த சட்டத்தின் 147 ஆம் மற்றும் 149 ஆம் பிரிவுகளின் விதிகளுக்கு அமைய கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025 ஆண்டிற்கு உரிமப்பத்திரக் கட்டணம் விதித்தல் பின்வருமாறு அமைய வேண்டும் என்று 2024.09.09 ஆந் திகதிய 2021 ஆம் இலக்க தீர்மானத்தினால் தீர்மானித்துள்ளது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*எச். எம். எஸ். ஹேரத்,*
*செயலாளர்,*
*கிரிபாவ பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கிரிபாவ,*
*2024, செத்தெம்பர் 09.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 3 ஆம் உட் பிரிவில் 147 ஆம் பிரிவு மற்றும் 149 ஆம் பிரிவுகளினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி உரிய சட்டத்தின் அல்லது உரிய சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அல்லது சபையினால் ஏற்றுக் கொண்டு செயற்படுத்துகின்ற துணை விதியின் கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் I ஆவது நிரலில் ஏதாவதொரு செயற்பாட்டிற்காக கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் ஏதாவதொரு இருப்பிடத்தில் அல்லது சுற்றாடலினை உபயோகிப்பதற்கு அதிகாரம் வழங்கி 2024 ஆம் ஆண்டில் வழங்கப்படுகின்ற ஏதாவதொரு உரிமப் பத்திரத்திற்காக II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தினை உரிமப் பத்திரக் கட்டணமாக 2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட வேண்டும் என்றும்,*

*இன்னும் உரிய இடம் அல்லது சூழல் 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சுற்றுலா சட்டத்தின் செயற்பாட்டிற்காக சுற்றுலாச் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ள அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஹோட்டல் அல்லது உணவகம் அல்லது தரிப்பிடம் என்னும் போது, அதற்குரிய உரிமப் பத்திரம் வழங்கும் போது அந்த இடத்தினால் அல்லது சூழலினால் 2024 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற கிடைப்பனவுகளில் நூற்றிற்கு ஒன்று (1%) அளவில் உரிமப் பத்திரக் கட்டணமாக 2025 ஆம் ஆண்டிற்காக அமைய வேண்டும் என்றும் நான் தீர்மானிக்கின்றேன்.*

**அட்டவணை**

| தொ. இல. | நிரல் I<br>தொழிலின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்தப் பெறுமதி<br>750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
|---|---|---|---|---|
| | **விரும்பத்தகாத வியாபாரம்** | | | |
| 1. | பசளை அல்லது இரசாயன பசளை தயாரித்தல் அல்லது விற்பனைக்கு வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | மிருகக் கட்டுப்பாடு (இறைச்சி, பால் அல்லது முட்டைக்காக) | 500.00 | 750.00 | 1,000.00 |
| 3. | மிருக வைத்திய மருந்தகத்தைக் கொண்டு நடாத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 4. | மொத்த விற்பனைக்காக விரைவாக அழுகுகின்ற உணவு வகைகளை அல்லது பொருட்களை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | கருவாடு உப்பு மீன் அல்லது ஜாடி 150 கி. கி. இற்கு மேற்பட்ட அளவினை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 6. | மீன் அல்லது இறைச்சி ஜாடி இடல் அல்லது உலர்த்தல் அல்லது ஐஸ் இடல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I<br>தொழிலின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்தப் பெறுமதி<br>750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | <br><br>750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | <br><br>1,500 ரூபாவிற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
|---|---|---|---|---|
| 7. | சிரட்டைக் கரிஅல்லது மரக்கரி தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 8. | புகையிலை உலர்த்தல் | | | |
| 9. | மிருக உணவு தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | சவர்க்காரம் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 11. | மிருக முள் அரைத்தல் அல்லது வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | புதிய உலோகம் அல்லது பழைய உலோகம் வைத்திருத்தல் | | | |
| 13. | உலோகக் கழிவுகளை வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | வீட்டு உபகரணம் தயாரித்தல் | | | |
| 15. | பிறம்புப் பொருட்களைத் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 16. | தச்சுத் தொழில் நிலையத்தைக் கொண்டு நடாத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. | சிரப் அல்லது பழப் பானம் தயாரித்தல் | | | |
| 18. | இனிப்புப் பண்டங்களைத் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 19. | தென்னம் மட்டை ஊறவிடல் அல்லது அழுக்கடையச் செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 20. | தூரிகைகளை தயாரித்தல் (பற்தூரிகை தவிர) | 500.00 | 750.00 | 1,000.00 |
| 21. | பற்தூரிகை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 22. | கள் ஒன்றுசேர்த்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 23. | வினாகிரி தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 24. | மரம் கிழித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 25. | வர்ணம், வார்னிஸ் அல்லது டிஸ்டெம்பர் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 26. | நார் சாயம் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 27. | பழங்கள், மீன் அல்லது ஏனைய உணவு வகைகளை டின்களில் அடைத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 28. | கோப்பி, தானிய வகைகளை அரைத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 29. | பேக்கின் பவுடர் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 30. | பொட்களை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 31. | மெழுகுவர்த்தி தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 32. | எழுதும் மை, அச்சு செய்கின்ற மை அல்லது இஸ்டென்சில் மை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 33. | துணியில் இடும் நீலம் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 34. | வாசனைத் திரவியம் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 35. | பாடசாலை வெண்கட்டி தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 36. | டயர் அல்லது ரியுப் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 37. | டயர் மீள் நிரப்புதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 38. | டயர் டியுப் வொல்கனைசின் செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 39. | சீமெந்து தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 40. | சீமெந்து பொருட்களை அல்லது எஸ்பஸ்டர் சீமெந்துப் பொருட்கள் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 41. | மணல் கடதாசி தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I<br>தொழிலின் தன்மை | நிரல் II<br>இடத்தின் வருடாந்தப் பெறுமதி<br>750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | <br><br>750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. | <br><br>1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில்<br>ரூபா ச. |
|---|---|---|---|---|
| 42. | பிளாஸ்டிக் பொருட்களை தயாரித்தல் | | | |
| 43. | செங்கல் சுடல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 44. | இயந்திர உபகரணத்தினால் துணி நெய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 45. | ஓடு தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 46. | பசளை, சுண்ணாம்பு அல்லது ஏனைய பொருட்கள் இடப்பட்டுள்ள சாக்குகளை சுத்தம் செய்து விற்பனை செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 47. | இயந்திர உதவியுடன் சிமெந்து புலோக் கட்களை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 48. | தேயிலை பக்கட்டில் அடைத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 49. | வாசனைத் திரவியங்களை பக்கட்டில் அடைத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 50. | உட்கொள்ள உதவும் சுண்ணாம்பு புளொக் கல் விற்பன செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 51. | நொருக்கு தீன் வகைகளை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 52. | நீர் பில்டர் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை 02**

**ஆபத்துடைய வியாபாரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | கருங்கல் தோண்டல் அல்லது உடைத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | காய்கறி எண்ணெய் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 3. | தேங்காய் எண்ணெய் தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 4. | தீப்பெட்டி தயாரித்தல் அல்லது களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | மெதிலேட் இஸ்பிரித்து தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 6. | தேயிலை பெட்டி தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 7. | தும்பு அல்லது ஏனைய நார் பொருட்களை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 8. | தும்பு அல்லது ஏனைய நார் பொருட்களினால் பொருட்களை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 9. | வைக்கோல் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | பயன்படுத்திய ஆடைகளை களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 11. | ஆபரணங்கள தயாரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | இயந்திரத்தின் உதவியுடன் மரம் அறுத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 13. | இயந்திர உபகரணம் பயன்படுத்தும் தொழில் நிலையத்தை நடாத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | வெற்று சாக்கு அல்லது வெற்று போத்தல் வைத்திருத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 15. | மிதி வண்டி அல்லது மோட்டார் சைக்கிள் பழுதுபார்ப்பு | 500.00 | 750.00 | 1,000.00 |
| 16. | பயன்படுத்தப்பட்ட கடதாசி அல்லது பத்திரிகை பெற்றுக் கொள்ளல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. | விசிறி நிறம் தீட்டல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 18. | வாணவெடி அல்லது பட்டாசுக்களை களஞ்சியப்படுத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 19. | ஆயுர்வேத மருந்துகள், எண்ணெய் வகைகளை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 20. | மணல் களஞ்சியப்படுத்தும் நிலையத்தை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I தொழிலின் தன்மை | நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் ரூபா ச. |

**அட்டவணை 03**

**விரும்பத்தகாததும் ஆபத்துடையதுமான வியாபாரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இரசாயன பொருட்களை பயன்படுத்தி கருவா, கராம்பு, ஏலக்காய் அல்லது நார் வகைகளை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | துணிகளை அச்சிடல் அல்லது சாயம் இடல் அல்லது பதிக் இடல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 3. | மின் உலோகம் பூசுதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 4. | எண்ணெய் அல்லது மிருக கொழுப்பு தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | வானவெடில் அல்லது பட்டாசு தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 6. | பட்டரிகளுக்கு மின்ஏற்றல் அல்லது பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 7. | உலோக வகைகளை பொருத்துதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 8. | மோட்டார் வாகனங்களை பழுதுபார்த்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 9. | மோட்டார் வாகனங்களை சர்விஸ் செய்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | பேலெக் வேலைத்தளத்தை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 11. | மோட்டார் வாகனத்திற்கு பொடி அடித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | பூச்சிக் கொல்லிகள், களைக் கொல்லிகள் தயாரித்தல் அல்லது மீள் நிரப்புதல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 13. | கிருமி கொல்லி தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | சேதனப் பசளை தயாரித்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை 04**

1988.08.23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்கப்பட்ட துணை விதிக்கு அமைய உரிமப்பத்திரம் பெற வேண்டிய வியாபாரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | வெதுப்பகத்தைக் கொண்டு நடாத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 2. | சோற்றுக் கடை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 3. | தேநீர் மற்றும் கோப்பி கடை ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 4. | உணவகம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 5. | தலைமுடி ஒழுங்கமைக்கும் சலூன் மற்றும் பாபர் கடை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 6. | மீன் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 7. | ஹோட்டல் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 8. | இறைச்சி விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 9. | மாடு வெட்டும் நிலையம் ஒன்றை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 10. | பால் மற்றும் பால் விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 11. | அடகு பதிவுசெய்யும் நிலையத்தை கொண்டு நடாத்தல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 12. | குளிர்பான பேட்டையை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| தொ. இல. | நிரல் I தொழிலின் தன்மை | நிரல் II இடத்தின் வருடாந்தப் பெறுமதி | | |
|---|---|---|---|---|
| | | 750 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச. | 750 ரூபாவிற்கு மேல் 1,500 ரூபாவிற்கு மேற்படாத சந்தர்ப்பத்தில் ரூபா ச. | 1,500 ரூபா விற்கு மேற்பட்ட சந்தர்ப்பத்தில் ரூபா ச. |
| 13. | மாட்டுப்பண்ணையை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 14. | பொது வர்த்தக நிலையத்தைக் கொண்டு நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 15. | ஆபரண விற்பனை | 500.00 | 750.00 | 1,000.00 |
| 16. | லொன்டரியை நடாத்திச் செல்லல் | 500.00 | 750.00 | 1,000.00 |
| 17. | வாடிவீடு | 500.00 | 750.00 | 1,000.00 |
| 18. | நடமாடும் வியாபாரம் | 500.00 | 750.00 | 1,000.00 |

10-15/3

---

## கிரிபாவ பிரதேச சபை

வாகனம் மற்றும் மிருகங்களுக்கு வரி விதித்தல் - 2025

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உட் பிரிவில் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி கிரிபாவ பிரதேச சபையின் அதிகாரப் பணிகள், கடமைகளை நிறைவேற்றுகின்ற கிரிபாவ பிரதேச சபையின் செயலாளராகிய எச். எம். எஸ். ஹேரத் ஆகிய நான், குறித்த சட்டத்தின் 148 ஆம் பிரிவின் விதிகளுக்கு அமைய கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025 ஆம் ஆண்டிற்கு வாகனம் மற்றும் மிருக வரி விதித்தல் பின்வருமாறு அமைய வேண்டும் என்று 2024.09.09 ஆந் திகதிய 2022 ஆம் இலக்க தீர்மானத்தினால் தீர்மானித்துள்ளது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

*உரிய வாகனம் அல்லது மிருகம் தமது பொறுப்பில் வைத்திருக்கும் திகதிகளின் எண்ணிக்கை 30 நாட்கள் பூர்த்தியடைந்த உடனே 2025 ஆம் ஆண்டிற்காக இந்த வரியை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும்.*

எச். எம். எஸ். ஹேரத்,
செயலாளர்,
கிரிபாவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கிரிபாவ,
2024, செத்தெம்பர் 09.

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் 3 ஆம் உட் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய அச் சட்டத்தின் 148 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் வைத்துள்ள ஏதாவதொரு வாகனம் அல்லது மிருகம் தொடர்பாக வரியினை விதித்து அறவிடுவதற்கும், அவ் வரி 2025 ஆம் ஆண்டின் ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிக்கு முன் கிரிபாவ பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் என்று நான் தீர்மானிக்கின்றேன்.*

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| (1) | (i) | மோட்டார் வாகனம், மோட்டார் ரைசிகிள், மோட்டார் லொறி, மோட்டார் சைக்கிள், மாட்டு வண்டி, ஜின் ரிக்ஷோ, மிதி வண்டி, அல்லது ரைசிகிள் அல்லாத எல்லா வாகனத்திற்காகவும் | ரூ.25.00 |
| | (ii) | எல்லா சைக்கில்கள் அல்லது ரைசிகல்கள் அல்லது சைக்கிள் கார் அல்லது சில்லு வண்டிக்காக | |
| | | (அ) வியாபார அலுவலுக்காக உபயோகிப்பதாயின் | ரூ.18.00 |
| | | (ஆ) வியாபார அலுவலுக்கு அல்லாது உபயோகிப்பதாயின் | ரூ.4.00 |

விட்டம் 26 அங்குலத்திற்கு பார்க்கிலும் குறைந்த சில்லு உள்ள சிறுவர் வாகனம், வீல் பெரோ, இன்னும் தனிப்பட்ட இடங்களில் மாத்திரம் வியாபாரத்திற்காக மாத்திரம் உபயோகிக்கும் கை வண்டி மற்றும் வியாபார அலுவலுக்காக உபயோகிக்கப்படாத கை வண்டி ஆகியன மேற்கூறப்பட்ட கட்டணத்திலிருந்து விடுவிக்கப்படும்.

10-15/4

---

**கிரிபாவ பிரதேச சபை**

பிரதேச சபை எல்லைக்குள் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கான
துணை விதியின் கீழ் கட்டணம் விதித்தல் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உட் பிரிவின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி கிரிபாவ பிரதேச சபையின் அதிகாரப் பணிகள், கடமைகளை நிறைவேற்றுகின்ற கிரிபாவ பிரதேச சபையின் செயலாளராகிய எச். எம். எஸ். ஹேரத் ஆகிய நான், குறித்த சட்டத்தின் 152 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் விதிகளுக்கு அமைய கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025 ஆம் ஆண்டிற்கு உரித்தாக பிரதேச சபை எல்லையினுள் வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பாக பொது இடம் ஒன்றை ஏற்பாடு செய்வதற்காக கட்டணம் விதித்தல் பின்வருமாறு அமைய வேண்டும் என்று 2024.09.09 ஆந் திகதிய 2023 ஆம் இலக்க தீர்மானத்தினால் தீர்மானித்துள்ளது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

எச். எம். எஸ். ஹேரத்,
செயலாளர்,
கிரிபாவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கிரிபாவ,
2024, செத்தெம்பர் 09.

**தீர்மானம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர்விளைச் சட்டதிட்ட) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் (அ) பந்தியுடன் வாசிக்கப்பட வேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 152 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்கத்திற்கான உள்ளூராட்சி நிறுவன (ஏற்றுக் கொள்ளப்பட்ட துணை விதி) சட்டத்தின் (2) ஆம் பிரிவில் (1) ஆம் உட் பிரிவின் கீழ், வடமேல் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விடயப் பொறுப்புடைய அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி, வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடையவரினால் ஒழுங்கமைக்கப்பட்ட 2010.07.16 ஆந் திகதிய இலக்கம் 1663 இற்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி IV(அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட வடமேல் மாகாணத்தின் மாகாண சபையினால் உறுதிப்படுத்தப்பட்ட 2011.04.28 ஆந் திகதிய 1703/18 ஆம் இலக்கத்திற்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

வர்த்தமானியில் IV (அ) பகுதியில் அறிவித்தலினால் பிரசிரிக்கப்பட்ட கிரிபாவ பிரதேச சபையினால் 2010.09.28 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொது சபையினால் ஏற்றுக் கொண்டு 1714 ஆம் இலக்கம் 2011.07.08 ஆந் திகதி இலங்கைச் சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், அத் துணை விதிப்படி கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணம் 2024 ஆம் ஆண்டிற்கு அறவிட வேண்டும் என்று நான் தீர்மானிக்கின்றேன்.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் ஒருமுறை மாத்திரம் செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணம் ரூபா சதம் | III ஆம் நிரல் தரித்து வைப்பதற்கான கட்டணம் ஒரு வருடத்திற்கு ரூபா சதம் |
|---|---|---|
| 1. எல்லா முக்சக்கர வண்டிக்காவும் | 500.00 | 600.00 |
| 2. வேறு வாகனம் | 500.00 | 300.00 |

(இந்த எல்லா கட்டணங்களும் சனவரி மாதம் 31 ஆந் திகதிக்கு முன் செலுத்தப்படல் வேண்டும்)

3. வாடகை அடிப்படையினாலன்றி பிரதேச சபை எல்லையினுள் அமைந்துள்ள வாகன தரிப்பிடத்தில் ஒரு மணித்தியாலத்திற்கு அதிகமான நேரம் தரித்து வைக்கும் வாகனத்தில் இருந்து பின்வருமாறு கட்டணம் அறவிடப்படும்.

| | |
|---|---|
| மிதி வண்டி /முச்சக்கர வண்டி | ரூ. 30.00 |
| மோட்டார் வண்டி /வேன் /சிறிய லொரி | ரூ. 50.00 |
| பேருந்து /லொரி | ரூ. 100.00 |

10-15/5

---

**கிரிபாவ பிரதேச சபை**

விளம்பரம் மற்றும் அழகிய சுற்றாடல் தொடர்பாக துணை விதியின் கீழ் கட்டணம் விதித்தல் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபை சட்டத்தின் 9 ஆம் பிரிவில் (3) ஆம் உட் பிரிவின் கீழ் கிடைக்கப் பெற்றுள்ள அதிகாரப்படி கிரிபாவ பிரதேச சபையின் அதிகாரப் பணிகள், கடமைகளை நிறைவேற்றுகின்ற கிரிபாவ பிரதேச சபையின் செயலாளராகிய எச். எம். எஸ். ஹேரத் ஆகிய நான், கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவிற்காக 2025 ஆண்டிற்கு உரித்தாக பிரதேச சபை எல்லையினுள் விளம்பரம் மற்றும் அழகிய சுற்றாடல் தொடர்பாக கட்டணம் விதித்தல் பின்வருமாறு அமைய வேண்டும் என்று 2024.09.09 ஆந் திகதிய 2024 ஆம் இலக்க தீர்மானத்தினால் தீர்மானித்துள்ளது பற்றி இத்துடன் அறிவித்தல் விடுக்கின்றேன்.

எச். எம். எஸ். ஹேரத்,
செயலாளர்,
கிரிபாவ பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
கிரிபாவ,
2024, செத்தெம்பர் 09.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 மற்றும் 126 ஆம் பிரிவுகளினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி 1998.08.28 ஆந் திகதிய இலக்கம் 520/7 IV (ஆ) அதி விசேட வர்த்தமானியில் உள்ளூராட்சி

விடயப் பொறுப்புடைய அமைச்சரினால் அனுமதித்து பிரசுரிப்பதற்கு பிரகடனப்படுத்தப்பட்ட நிறைவேற்றப்பட்ட துணை விதியில் 39 ஆம் பகுதியில் விளம்பர அறிவித்தல் மற்றும் ஆழகிய சுற்றாடல் தொடர்பாக துணை விதிப்படி கிரிபாவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அறிவித்தல் ஒன்று (பதாகை உற்பட) நிர்மாணம், காட்சிப்படுத்தல் அல்லது காட்சிப்படுத்துவதற்கு திட்டமிடலுக்காக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணம் 2025 ஆம் ஆண்டிற்காக விதிக்கப்பட வேண்டும் என்று நான் தீர்மானிக்கின்றேன்.

**அட்டவணை**

| | I ஆம் நிரல்<br>விபரம் | II ஆம் நிரல்<br>அறவிடப்படும் கட்டணம்<br>ரூ. ச. |
|---|---|---|
| 1. | சுவரில் அல்லது மதிலில், பலகையில் அல்லது ஊன்று கோளின் உதவியுடன் காட்சிப்படுத்தும் நிரந்தர பிரச்சார அறிவித்தலுக்காக சதுர அடிக்கு (ஒரு வருடத்துக்கு) | 100.00 |
| 2. | பதாகை மூலம் காட்சிப்படுத்தப்படுகின்ற அறிவித்தல் ஒன்று ஒரு மாதத்திற்கு குறைந்த காலத்திற்கு காட்சிப்படுத்துவதற்காக சதுர அடிக்கு | 35.00 |
| 3. | பதாகை மூலம் காட்சிப்படுத்தப்படுகின்ற அறிவித்தல் ஒன்று ஒரு மாதத்திற்கு மேற்படாத மற்றும் 03 மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு காட்சிப்படுத்துவதற்காக சதுர அடிக்கு | 50.00 |
| 4. | பதாகை மூலம் காட்சிப்படுத்தப்படுகின்ற அறிவித்தல் ஒன்று 03 மாதத்திற்கு மேற்படாத காலம் மற்றும் 06 மாதத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு காட்சிப்படுத்துவதற்காக சதுர அடிக்கு | 70.00 |
| 5. | பதாகை மூலம் காட்சிப்படுத்தப்படுகின்ற அறிவித்தல் ஒன்று 06 மாதத்திற்கு மேற்படாத காலம் மற்றும் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலத்திற்கு காட்சிப்படுத்துவதற்காக சதுர அடிக்கு | 90.00 |

10-15/6

---

**கிரிபாவ பிரதேச சபை**

பொதுச் சந்தைக்கு கட்டணம் விதித்தல் - 2025

1984 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க கேளிக்கை வரி திருத்த சட்டத்தின் 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கேளிக்கை வரி கட்டளைச் சட்டத்தின் 2வது பிரிவின் (1) வது உப பிரிவில் மீகஹாகிவுல பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக 2025 ஆம் ஆண்டில் மீகஹாகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கேளிக்கை வரிக்குட்பட்ட ஏதாவதொரு பணிக்கு உட்செல்வதற்காக அறவிடப்படும் கட்டணத்தில் 10% ஐ கேளிக்கை வரியாக விதித்து அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) உட்பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2024 ஓகத்து மாதம் 15 ஆம் திகதி தீர்மான இலக்கம் 2024/08/15/317 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

டி. எம். கே. டி. திசானாயக்க,
சபை செயலாளர்,
மீகஹகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹகிவுல,
2024, செத்தெம்பர் 25.

### தீர்மானம்

1984 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க கேளிக்கை வரி திருத்த சட்டத்தின் 1984 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கேளிக்கை வரி கட்டளைச் சட்டத்தின் 2வது பிரிவின் (1) வது உப பிரிவில் மீகஹாகிவுல பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக மீகஹகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கேளிக்கை விரிக்குட்பட்ட ஏதாவதொரு பணிக்கு உட்செல்வதற்காக அறவிடப்படும் கட்டணத்தில் 10% ஐ கேளிக்கை வரியாக விதித்து அறவிடுவதற்கு தீர்மானிக்கின்றேன்.

மேலும், பொது நிகழ்ச்சிகள் காட்சிப்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் (176 அத்தியாயம்), பொது நிகழ்ச்சிகள் காட்சிப்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் 3 வது பிரிவின் பிரகாரம் விதிக்கப்படும் அனுமதிப்பத்திர கட்டணங்களை பின்வருமாறு அறவிடுவதற்கும் மிகஹாகிவுல பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

| தொ. இல. | விபரம் | ரூ. சதம் |
|---|---|---|
| 1. | 1 நாளுக்கு அல்லது 7 நாட்களுக்கு அதிகமாகாத போது | 250.00 |
| 2. | 7 நாட்களுக்கு அதிகமாகும் போது அதிகரிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு | 50.00 |
| 3. | நடமாடும் கேளிக்கை நடவடிக்கைகளுக்காக | 1,500.00 |

10 -33/6

---

**மீகஹாகிவுல பிரதேச சபை**

1975/77 இலக்கமுடைய சமூக கழகங்கள், பொது நிகழ்ச்சிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ்
கட்டணங்களை விதித்தல் - 2025

1975/77 இலக்கமுடைய சமூக கழகங்கள் கட்டளைச் சட்டம், பொது நிகழ்ச்சிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டணங்களை விதித்து அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) உட்பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2024 ஓகத்து மாதம் 15 ஆம் திகதி தீர்மான இலக்கம் 2024/08/15/318 ஆம் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

டி. எம். கே. டி. திசானாயக்க,
சபை செயலாளர்,
மீகஹாகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹாகிவுல,
2024, செத்தெம்பர் 25.

**தீர்மானம்**

1975/77 இலக்கமுடைய சமூக கழகங்கள் கட்டளைச் சட்டம், பொது நிகழ்ச்சிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2025 சனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் மீகஹாகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டணங்களை விதித்து அறவிடுவது பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட வேண்டுமென தீர்மானிக்கின்றேன்.

| தொ. இல. | விபரம் | ரூ. சதம் |
|---|---|---|
| 1. | விண்ணப்பப் படிவக் கட்டணம் | 50.00 |
| 2. | வருடாந்த அனுமதிப்பத்திர கட்டணம் | 100.00 |

10 -33/7

**மீகஹகிவுல பிரதேச சபை**

ஏக்கர் வரி விதித்தல் - 2025

மீகஹகிவுல பிரதேச சபையின் செயலாளர் என்ற வகையில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2024 ஓகத்து மாதம் 15 ஆம் திகதி தீர்மான இலக்கம் 2024/08/15/319 இன் கீழ் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தீர்மானம் எடுக்கப்பட்டதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

2025 ஆம் ஆண்டுக்கு விதிக்கப்பட்டுள்ள அவ் ஏக்கர் வரிகளை மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் முடிவடையும் ஒவ்வொரு காலாண்டிலும் 04 சம தவணைகளில் பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்த வேண்டுமென மேலும் அறிவிக்கப்படுகிறது.

2025 ஆம் ஆண்டிற்கான மொத்த ஏக்கர் வரியை 2025 சனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மிகஹகிவுல பிரதேச சபை அலுவலகத்திற்கு செலுத்தினால் அம்மொத்த ஏக்கர் வரித் தொகையில் பத்து வீத (10%) சலுகையும், ஒவ்வொரு தவணைக்குரிய ஏக்கர் வரியை ஒவ்வொரு காலாண்டின் முதல் மாதத்தின் கடைசி நாளுக்கு முன்னர் பிரதேச சபைக்கு செலுத்தினால் ஐந்து வீத (5%) சலுகையும் வழங்கப்படும்.

டி. எம். கே. டி. திசானாயக்க,
சபை செயலாளர்,
மீகஹகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹகிவுல,
2024, செத்தெம்பர் 25.

**தீர்மானம்**

" 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 152 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவில் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், மீகஹகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்திருக்கும், மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 135 ஆவது பிரிவின் கட்டளைகளின் கீழ் ஏக்கர் வரியிலிருந்து விலக்களிக்கப்படாத, நிரந்தர அல்லது தொடர்ந்து பயிர்ச் செய்கையின் கீழுள்ள -

(அ) ஹெக்டயார் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு காணிக்கும், அக்காணியின் ஒவ்வொரு ஹெக்டயாருக்கும் 2025 ஆம் வருடத்திற்கு ரூ. 10.00 வீதம் வருடாந்த ஏக்கர் வரியை விதித்து அறவிடுவதற்கும்,

(ஆ) மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 134 ஆவது பிரிவின் (3) ஆவது உப பிரிவின் துணை கட்டளையின் கீழ் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சரினால் மீகஹகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியை விசேட பிரதேசமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1989 பெப்புருவரி 03 (அ) ஆந் திகதியிட்ட வர்த்தமானி அறிவித்தலில் IV (ஆ) பகுதியில் வெளியிட்டுள்ளதால், ஐந்து ஹெக்டயருக்கு குறைவான ஒவ்வொரு காணிக்கும் 2025 ஆம் வருடத்திற்கு ரூ. 50.00 விகிதமான வருடாந்த ஏக்கர் வரியை விதித்து அறவிடுவதற்கும் மற்றும்

(இ) பிரதேச சபை சட்டத்தின் 134 வதுபிரிவின் (6) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் அவ்வருடத்தின் மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 30 மற்றும் திசெம்பர் 31 ஆகிய திகதிகளுக்கு முன்னர் நான்கு சம தவணைகளில் செலுத்துவதற்கு கட்டளையிட வேண்டுமென மீகஹகிவுல பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

(ஈ) அச்சட்டத்தின் 134 (07) ஆவது பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வரிப்பணத்தை செலுத்த வேண்டிய முறைக்கு அமைய சலுகை வழங்கப்படுமென மேலும் தெரிவிக்கப்படுகிறது.

முழு வருடத்திற்குமான வரி பணத்தை சனவரி மாதம் 31 ஆம் திகதி முடிவடைவதற்கு முன்னர் செலுத்தினால் விதிக்கப்பட்ட வரிப் பணத்தில் 10% சலுகை வழங்கப்படுமெனவும்,

வரி பணத்தை காலாண்டுக்கு ஒருமுறை செலுத்தும் சந்தர்ப்பத்தில் வரியை செலுத்த வேண்டியகாலாண்டின் முதலாவது மாதத்திற்குள் செலுத்தினால் 5% சலுகை வழங்கப்பட வேண்டுமென மீகஹகிவுல பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

10 - 33/8

## மீகஹகிவுல பிரதேச சபை

கழிவுகளை சேகரிப்பதற்கான கட்டணங்களை அறவிடுதல் - 2025

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122 ஆவது பிரிவில் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக 2012.10.05 ஆந் திகதி 1778/45 இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பகுதியில் உள்ளூராட்சி அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள தரநிலை துணைச்சட்டத்தின் பிரதேச சபை பகுதியில் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான துணைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மீகஹகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகளை சேகரிப்பதற்காக அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கட்டணமொன்றை 2025 ஆம் ஆண்டுக்கு அறவிட வேண்டுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) உட்பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2024 ஓகத்து மாதம் 15 ஆம் திகதி தீர்மான இலக்கம் 2024/08/15/320 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.*

டி. எம். கே. டி. திசானாயக்க,
சபை செயலாளர்,
மீகஹகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹகிவுல,
2024, செப்தெம்பர் 25.

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 122(அ) மற்றும் 122-126 பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக 2012.10.05 ஆந் திகதி 1778/45 இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பகுதியில் உள்ளூராட்சி அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் ஊவா மாகாண கௌரவ முதலமைச்சரினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள தரநிலை துணைச்சட்டத்தின் பிரதேச சபை பகுதியில் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான துணைச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மீகஹகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கழிவுகளை சேகரிப்பதற்காக அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கட்டணமொன்றை 2025 ஆம் ஆண்டுக்கு அறவிடுவதற்கு தீர்மானிக்கின்றேன்.*

### அட்டவணை

| தொ. இல. | விபரம் | ரூ. சதம் |
|---|---|---|
| 01. | கரமெடிய மெலிபன் ஆடை தொழிற்சாலை கழிவுகளை அகற்றுவதற்காக டிரெக்டர் வாகனத்தை பெற்றுக்கொள்ளும் ஒரு சந்தர்ப்பத்திற்கு | 10,000.00 |
| 02. | கரமெடிய ப்ரீமா மா தொழிற்சாலையில் வெளியேற்றப்படும் 1 Kg - 40Kg வரை | 1,500.00 |

* அதிகரிக்கும் ஒவ்வொரு 1Kg இற்கும் விகிதாசார மதிப்பீட்டு முறையில் கட்டணம் அறவிடப்படும்.(1500/40)

10 - 33/9

---

## மீகஹகிவுல பிரதேச சபை

நீர் கட்டணங்களை அறவிடுதல் - 2025

*மீகஹகிவுல பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படும் குடிநீர் திட்டங்களின் மூலம் நீரை பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களினால் பின்வரும் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள கட்டணங்களை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச்*

சட்டத்தின் 9(3) உட்பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2024 ஓகத்து மாதம் 15 ஆம் திகதி தீர்மான இலக்கம் 2024/08/15/321 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

டி. எம். கே. டி. திசானாயக்க,
சபை செயலாளர்,
மீகஹகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹகிவுல,
2024, செத்தெம்பர் 25.

**தீர்மானம்**

1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் நிலையான துணைச்சட்ட இலக்கம் 02 இன் கீழ் உள்ளூராட்சி வீடமைப்பு, நிர்மாண அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1988.08.23 ஆம் திகதியிட்ட 520/07 இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் IV (அ) பகுதியில் வெளியிடப்பட்டுள்ள பொது துணை சட்டங்களில் 34 ஆவது இலக்கமுடைய பிரிவான நீர் வழங்கல் சட்டத்தின் இலக்கம் 40 முதல் 43 ஆம் துணைச்சட்டங்களில் குறிப்பிட்டுள்ளவாறு பின்வரும் அட்டவணை 01, அட்டவணை 02 இல் குறிப்பிட்டுள்ளவாறு, மற்ற நீர் அறவீடுகளை மிகஹகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நீர் வழங்கல் திட்டங்கள் மூலம் 2025.01.01 ஆந் திகதி முதல் நீர் கட்டணங்களை அறவிடுவதற்கு தீர்மானிக்கின்றேன்.

**அட்டவணை இலக்கம் - 01 கட்டணங்களை அறவிடல் மீகஹகிவுல ஹொலமல் வத்த நீர் வழங்கல் திட்டம்**

| தொ. இல. | கட்டண அலகு (கன மீட்டர்) | வீட்டு இணைப்புகளுக்கு மற்றும் அரச நிறுவனங்களுக்கு | | வியாபார மற்றும் இதர நிறுவனங்களுக்கு | |
|---|---|---|---|---|---|
| | | நிலையான கட்டணம் | ஒரு அலகிற்கு ரூபாய் | நிலையான கட்டணம் | ஒரு அலகிற்கு ரூபாய் |
| 01 | 0 - 05 வரை | 250.00 | 20.00 | 350.00 | 19.00 |
| 02 | 06 - 10 வரை | 300.00 | 20.00 | 400.00 | 19.00 |
| 03 | 11 - 15 வரை | 350.00 | 25.00 | 450.00 | 24.00 |
| 04 | 16 - 20 வரை | 400.00 | 30.00 | 500.00 | 29.00 |
| 05 | 21 - 25 வரை | 425.00 | 35.00 | 525.00 | 34.00 |
| 06 | 26 - 30 வரை | 450.00 | 40.00 | 550.00 | 39.00 |
| 07 | 30 - 35 வரை | 475.00 | 45.00 | 575.00 | 44.00 |
| 08 | 36 அல்லது 36 இற்கு மேல் | 500.00 | 50.00 | 600.00 | 49.00 |

**அட்டவணை இலக்கம் - 01 கட்டணங்களை அறவிடல்**
**10 ஆம் தல்தென நீர் வழங்கல் திட்டம்**

| தொ. இல. | கட்டண அலகு (கன மீட்டர்) | வீட்டு இணைப்புகளுக்கு மற்றும் அரச நிறுவனங்களுக்கு | | வியாபார மற்றும் இதர நிறுவனங்களுக்கு | |
|---|---|---|---|---|---|
| | | நிலையான கட்டணம் | ஒரு அலகிற்கு ரூபாய் | நிலையான கட்டணம் | ஒரு அலகிற்கு ரூபாய் |
| 01 | 01 - 10 வரை | 175.00 | 15.00 | 300.00 | 19.00 |
| 02 | 11 - 15 வரை | 225.00 | 20.00 | 300.00 | 24.00 |
| 03 | 16 - 20 வரை | 225.00 | 25.00 | 350.00 | 29.00 |
| 04 | 21 - 25 வரை | 250.00 | 30.00 | 350.00 | 34.00 |
| 05 | 26 - 30 வரை | 250.00 | 35.00 | 350.00 | 39.00 |
| 06 | 31 - 35 வரை | 250.00 | 40.00 | 350.00 | 44.00 |
| 07 | 36 அல்லது 36 இற்கு மேல் | 250.00 | 45.00 | 350.00 | 49.00 |

**அட்டவணை இலக்கம் - 01 கட்டணங்களை அறவிடல்**

**வெலன்லந்த/கெசெல்வத்த/கோமாரிக்கா/லிஹினியாகெடிய/தல்தெல அருக்கும்புர நீர் வழங்கல் திட்டம்**

| தொ. இல. | கட்டண அலகு (கன மீட்டர்) | வீட்டு இணைப்புகளுக்கு மற்றும் அரச நிறுவனங்களுக்கு | | வியாபார மற்றும் இதர நிறுவனங்களுக்கு | |
|---|---|---|---|---|---|
| | | நிலையான கட்டணம் | ஒரு அலகிற்கு ரூபாய் | நிலையான கட்டணம் | ஒரு அலகிற்கு ரூபாய் |
| 01 | 01 - 10 வரை | 175.00 | 15.00 | 300.00 | 20.00 |
| 02 | 11 - 15 வரை | 225.00 | 20.00 | 300.00 | 25.00 |
| 03 | 16 - 20 வரை | 225.00 | 25.00 | 350.00 | 30.00 |
| 04 | 21 - 25 வரை | 250.00 | 30.00 | 350.00 | 35.00 |
| 05 | 26 - 30 வரை | 250.00 | 35.00 | 350.00 | 40.00 |
| 06 | 31 - 35 வரை | 250.00 | 40.00 | 350.00 | 45.00 |
| 07 | 36 அல்லது 36 இற்கு மேல் | 250.00 | 45.00 | 350.00 | 50.00 |

நீர் சேவைகளுக்கான கட்டணங்ககளை அறலிடல்

| தொ. இல. | விபரம் | ரூ. சதம் |
|---|---|---|
| 01 | நீர் விண்ணப்பப்படிவம் கட்டணம் | 250.00 |
| 02 | நீர் மானிக்கான கட்டணம் | 7500.00 |
| 03 | புதிய நீர் இணைப்பை பெற்றுக்கொள்வதற்கான வைப்புத் தொகை | 5000.00 |
| 04 | நீர் வரி ஆவணத்தில் பெயர் மற்றும் செய்வதற்கான விண்ணப்பக்கட்டணம் | 300.00 |
| 05 | ஒப்பந்த நிபந்தனைகளை மீறும் ஒரு சந்தர்ப்பத்திற்கான கட்டணம் | 5000.00 |

புதியநீர் இணைப்பொன்றை பெற்றுக் கொள்வதற்காக அறவிடப்படும் கட்டணம்

| தொ. இல. | விபரம் | ரூ. சதம் |
|---|---|---|
| 01. | வீடுகள், அரச நிறுவனங்கள் | 10,000.00 |
| 02. | வியாபார | 12,000.00 |

1. புதிய நீர் இணைப்பை பெற்றுக்கொள்ளும் போது பிரதான குழாயிலிருந்து சம்பந்தப்பட்ட இடம் வரை தேவையான குழாய் பாகங்கள் PVC ½ அங்குல குழாய் (நீளம் 4m) இணைப்பு கட்டத்திற்கு பொருந்தும்

2. நீர் மானியை பிரதேச சபையிலேயே பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. புதிய நீர் இணைப்பை பெற்றுக்கொள்ளும் போது பிரதான குழாயிலிருந்து சம்பந்தப்பட்ட 4m PVC குழாயிலிருந்து சேவை வழங்குவதற்கான அவசியமான இணைப்பு குழாய்கள் மற்றும் பாகங்கள் (மீட்டர் தவிர்ந்த) பாவனையாளர்களினால் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் சபையினால் சமர்ப்பிக்கப்படும் செலவு மதிப்பீட்டு தொகை பாவனையாளர்களினால் செலுத்தப்பட வேண்டும்.

துண்டிக்கப்பட்டுள்ளநீர் இணைப்பை மீண்டும் வழங்கு வதற்கான கட்டணம்

| தொ. இல. | விபரம் | ரூ. சதம் |
|---|---|---|
| 01. | வீடுகள் / அரச நிறுவனங்கள் | 3,000.00 |
| 02. | வேறு (வியாபார) | 5,000.00 |

சுத்திகரிக்கப்பட்ட நீருக்கான கட்டணங்களை அறவிடல்

சுத்திகரிக்கப்பட்ட நீட் 01 லீட்டரின் விலை 4.00

10 - 33/10

## மீகஹகிவுல பிரதேச சபை

கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான கட்டணங்களை அறவிடுதல் - 2025

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் இலக்கங்கள் 21,49,78 போன்ற பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 1988.01.01 ஆந் திகதி 520/07 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி அதி விசேட வர்த்தமானியின் IV (அ) பகுதியில் கௌரவ அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள (260 ஆவது அத்தியாயமான) வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) உட்பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2024 ஓகத்து மாதம் 15 ஆந் திகதி தீர்மான இலக்கம் 2024/08/15/322 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.*

டி. எம். கே. டி. திசானாயக்க,
சபை செயலாளர்,
மீகஹகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹகிவுல,
2024, செத்தெம்பர் 25.

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் இலக்கங்கள் 21,49,78 போன்ற பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் 1988.01.01 ஆந் திகதி 520/ 07 ஆம் இலக்கமுடைய உள்ளூராட்சி அதி விசேட வர்த்தமானியின் IV (அ) பகுதியில் கௌரவ அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள (260வது அத்தியாயமான) வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்களை அறவிடுவதற்கு தீர்மானிக்கின்றேன்.*

**அட்டவணை**

01. மூல தளவரைபடத்தை தீர்ப்பதற்கான அனுமதி அபிவிருத்தி அனுமதிப்பத்திரக் கட்டணம் நிர்மாணம் தொடர்பாக

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பப்படிவ கட்டணம் | ரூ. 300.00 |
| 2. | செயலாக்க கட்டணம் | |
| | * குடியிருப்பு கட்டிடங்கள் | 2500.00 |
| | * வணிக மற்றும் வேறு கட்டிடங்கள் | |
| | சிறிய அளவு | 5500.00 |
| | நடுத்தர அளவு | 6500.00 |
| | பெரிய அளவு | 8000.00 |
| 3. | எல்லை சுவர்/பாதுகாப்பு சுவரை நிர்மாணித்தல் | ரூ. 1500.00 |
| 4. | தொலைபேசி தொலைத்தொடர்பு கோபுரம் | ரூ. 10000.00 |

02. கட்டிடநிர்மாணம்/பகுதிகளை சேர்த்தல்/தரைத்தள பரப்பளவு குடியிருப்புக்காக வணிக அல்லது வேறு மீள் நிர்மாணங்களுக்கு அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் சதுரமீட்டர்களில் பாவனைக்கு வழங்குதல் ரூபாய் சதங்களில்,

| தரைத்தளபரப்பளவு சதுர மீட்டரில் | குடியிருப்புக்காக ரூ. சதம் | வணிக மற்றும் வேறுபாவனை ரூ. சதம் |
|---|---|---|
| 45 க்கு குறைவு | 600.00 | 2,000.00 |
| 45 - 90 வரை | 1,600.00 | 2,500.00 |
| 91 - 180 வரை | 2,600.00 | 3,500.00 |
| 181 - 270 வரை | 3,600.00 | 4,500.00 |
| 271 - 450 வரை | 4,600.00 | 6,500.00 |
| 451 - 675 வரை | 5,600.00 | 8,500.00 |
| 676 - 900 வரை | 6,600.00 | 10,500.00 |
| 901 - 1225 வரை | 7,600.00 | 12,500.00 |

ச. மீ. 90 உள்ள ஒவ்வொருதரைத்தள அளவு ரூ. 1,000.00 வீதம் ச. மீ. 90 உள்ள தரைத்தள அளவுக்கு ரூ. 1,500.00 வீதம்,

எல்லை சுவர்/பாதுகாப்பு சுவரை நிர்மாணித்தல்

| எல்லை சுவர் நிர்மாணித்தல் | எல்லை சுவர் நீள மீட்டர் ஒன்றுக்கான கட்டணம் | |
|---|---|---|
| | குடியிருப்பு ரூ. | வணிக மற்றும் வேறு வகை |
| கட்டிட எல்லைக்கு வெளியே | 40.00 | 50.00 |
| கட்டிட எல்லைக்குள் | 60.00 | 70.00 |

| தொலைபேசி தொலைதொடர்பு கோபுரங்கள் | செயலாக்க கட்டணம் | ரூ. சதம் |
|---|---|---|
| | உயர மீற்றர் 0 -20 வரை | 300,000.00 |
| | உயர் மீற்றர் 20 - 50 வரை | 400,000.00 |
| | உயர் மீற்றர் 50 க்கு மேல் | 600,000.00 |
| | ஒப்புதல் அனுமதிக்கான கட்டணம் | |
| | உயர மீற்றர் 5 க்கு | 20,000.00 வீதம் |

அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல் - ஒரு வருடம் நீடிப்பதற்கு ரூ. 1000.00
(அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களை வருடந்தோறும் புதுப்பிக்க வேண்டும்.)

03. முறையான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் இல்லாமல் நிர்மாணித்தல்/பகுதிகளை சேர்த்தல் மீள் நிர்மாணக்கிற்கு ஒப்புதல் அனுமதியை வழங்குவதற்கான கட்டணம்

| | குடியிருப்பு ச. மீ. 1க்கான கட்டணம் ரூ. சதம் | வணிக, வேறு ச. மீ. 1 க்கான கட்டணம் ரூ. சதம் |
|---|---|---|
| 1. அத்திவார வேலைகள் மட்டும் (தரை மட்டம் வரை முழுமைப்படுத்தப்பட்டுள்ளபோது) | 200.00 | 250.00 |
| 2. கூரை மட்டம் வரை (கூரையில்லாமல் அமைக்கப்பட்டுள்ளபோது) | 300.00 | 350.00 |

| | குடியிருப்பு ச. மீ. 1க்கான கட்டணம் ரூ. சதம் | வணிக, வேறு ச. மீ. 1 க்கான கட்டணம் ரூ. சதம் |
|---|---|---|
| 3. கூரையுடன் கட்டப்பட்டுள்ளபோது | 400.00 | 450.00 |
| 4. முழுமையாக கட்டப்பட்டுள்ளபோது | 500.00 | 550.00 |
| 5. எல்லை சுவர் நீள 1m க்கு | 30.00 | 60.00 |
| 6. தொலைபேசி தொலைதொடர்பு கோபுரம் | | |
| 0-30 இடையில் | 100,000.00 | |
| 30-60 இடையில் | 150,000.00 | |
| 60 க்கு மேல் | 200,000.00 | |

04. இணக்கப்பாட்டு சான்றிதழுக்கு

| | | |
|---|---|---|
| * குடியிருப்பு | 3000.00 | |
| * வணிக | | |
| சிறிய | 4000.00 | |
| நடுத்தர | 6000.00 | |
| பெரிய | 10000.00 | |
| விண்ணப்பப்படிவத்திற்கு | 150.00 | |

05. திட்டவரைபடங்களுக்கு அனுமதி வழங்குதல்

| | |
|---|---|
| விண்ணப்பப்படிவத்திற்கு | 200.00 |
| திட்ட வரைபட அனுமதிக் கட்டணம் | |
| ச. மீ 1000.00 க்கு குறைவான காணிகளுக்கு | 2500.00 |
| ச.மீ. 5001-10000 வரை | 5200.00 |
| 5001-10000 | 10200.00 வீதம் |
| ச.மீ. 10001 க்கு அதிகமான ஒவ்வொரு ச.மீ. 1000 க்கும் | 1200.00 வீதம் |

06. காணி உட்பிரிவு துண்டுகளுக்கு அனுமதி வழங்குவதற்கான கட்டணம்

| | | |
|---|---|---|
| விண்ணப்பப்படிவக் கட்டணம் | | 200.00 |
| அபிவிருத்தி பணியின் தன்மை | காணி துண்டின் அளவு | அறவிடப்பட வேண்டிய கட்டணம் |
| i. காணி உபபிரிவுகளை பிரிப்பதற்கு அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் | | அறவிட வேண்டிய தொகை (வீதி வடிகால், பொது காணி துண்டுகள் தவிர்ந்த) |
| ii. ஒப்புதல் அனுமதிக்கு | ச.மீ 150-300 இடையில் | 600.00 |
| | ச.மீ 301-600 இடையில் | 500.00 |
| | ச.மீ 601-900 இடையில் | 400.00 |
| | ச.மீ 901 க்கு மேல் | 300.00 |
| | ஒரு காணி துண்டுக்கு | 850.00 |

| | | குடியிருப்பு ச. மீ. 1க்கான கட்டணம் ரூ. சதம் | வணிக, வேறு ச. மீ. 1 க்கான கட்டணம் ரூ. சதம் |
|---|---|---|---|
| 07. | வீதி ரேகை சான்றிதழுக்கு | | 3000.00 |
| | விண்ணப்ப்ப்படிவக் கட்டணம் | | 150.00 |
| 08. | சுவீகரிக்கப்படாமை சான்றிதழுக்கு | | 1500.00 |
| | விண்ணப்ப்ப்படிவக் கட்டணம் | | 150.00 |
| | 1. காணி/வயல்களை நிரப்புவதற்கு | | |
| | சதுர மீட்டர் 150 க்கு குறைவான காணிகளுக்கு | | 2600.00 |
| | சதுர மீட்டர் 151- 300 வரை | | 5100.00 |
| | சதுர மீட்டர் 301 க்கு அதிகரிக்கும் ஒவ்வொரு 150 சதுர மீட்டருக்கும் | | 3100.00 |
| | ஒப்புதல் அனுமதிக் கட்டணம் | | |
| | ஒவ்வொரு சதுர மீட்டருக்கும் | | 5500.00 வீதம் |

10 - 33/11

---

**மீகஹகிவுல பிரதேச சபை**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்திற்கான கட்டணங்களை அறவிடல் - 2025

மீகஹகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்ற வியாபாரங்கள், தொழில்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வது சம்பந்தமாக பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கட்டணங்களை 2025 ஆம் ஆண்டு அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) உட்பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2024, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி தீர்மான இலக்கம் 2024/08/15/323 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

டி. எம். கே. டி. திசானாயக்க,
சபை செயலாளர்,
மீகஹகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹகிவுல,
2024, செத்தெம்பர் 25.

**தீர்மானம்**

1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கமுடைய சட்டங்களின் திருத்தப்பட்ட, 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கமுடைய தேசிய கற்றுச்சூழல் சட்டத்தின் 26 வது பிரிவின் கீழ் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக 1553/16 ஆம் இலக்கமுடைய 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலின் (இ) அட்டவணை, 2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதியிட்ட 1534/18 ஆம் இலக்கமுடைய வர்த்தமானி அறிவித்தல், 2264/18 ஆம் இலக்கமுடைய 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆம் திகதியிட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் (ஈ) பகுதியில் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு அமைவாக மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையினால் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்ற வியாபாரங்கள், தொழில்களுக்கு ஒரே தடவையில் 03 வருட காலங்களுக்கு ரூ. 4,500.00 க்கான சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திர கட்டணம் ஒன்றை அறவிடுவதற்கு தீர்மானிக்கின்றேன்.

அதேபோல் சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திரத்திற்கான பரிசோதனை கட்டணங்களை பின்வருமாறு செலுத்த வேண்டும்.

| ஆரம்ப முதலீடு | பரிசோதனை கட்டணம் |
|---|---|
| ரூ. 250,000.00 வரை | 3,000.00 |
| ரூ. 250,001.00 - ரூ. 500,000.00 வரை | 3,750.00 |
| ரூ. 500,001.00 - ரூ. 1,000,000.00 வரை | 5,000.00 |
| ரூ. 1,000,000.00 க்கு மேல் | 10,000.00 |
| விண்ணப்பப்படிவக் கட்டணம் | 200.00 |

10 - 33/12

---

## மீகஹகிவுல பிரதேச சபை

அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கு வரி விதித்தல் - 2025

மீகஹகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கு வரி விதித்தல் தொடர்பாக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கட்டணங்களை 2025 ஆம் ஆண்டுக்கு அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) உட்பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2024 ஓகத்து மாதம் 15 ஆம் திகதி தீர்மான இலக்கம் 2024/08/15/324 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

டி. எம். கே. டி. திசானாயக்க,
சபை செயலாளர்,
மீகஹகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹகிவுல,
2024, செத்தெம்பர் 25.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபை சட்டத்தின் இலக்கம் 153 (1) வது பிரிவுக்கு அமைய பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், மீகஹகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு அல்லது நிரந்தர அல்லது தொடர்ச்சியாக பயிர் செய்கை செய்வதற்கு பொருத்தமான ஏதாவதொரு காணியில்

(1) அக்காணியில் எந்தவொரு கட்டடமும் நிர்மாணிக்கப்பட்டிருக்காவிட்டால் அல்லது,

(2) அக்காணியில் முறையாக அல்லது நிரந்தரமாக பயிர்செய்கையின் கீழ் இல்லாத போது அல்லது

(3) அக்காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களுக்கு உண்மையாக புதைந்துள்ள நிலத்தின் அளவு மற்றும் அக்காணியின் மொத்த நில அளவுக்கும் இடையேயுள்ள இடைவெளி 1/20 அளவுக்கு குறைவாக இருக்குமானால்,

அக்காணியை அபிவிருத்தி செய்யப்படாத காணியாக கருதுதல் மற்றும் அவ்வாறு அபிவிருத்தி செய்யப்படாத காணியாக கருதப்படும் காணிகளுக்கு 2025 ஆம் வருடத்திற்கு அவ் ஒவ்வொரு காணியின், நிலத்தின் மூலதன பெறுமதியில் நூற்றுக்கு 0.1% வருடாந்த வரியை விதிப்பதற்கும் அவ்வபிவிருத்தி செய்யப்படாத காணிக்கான வரியை 2025 ஆம் வருடம் ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் மீகஹகிவுல பிரதேச சபைக்கு செலுத்த வேண்டுமென கட்டளையிட வேண்டுமென்ன தீர்மானிக்கின்றேன்.

10 - 33/13

## மீகஹகிவுல பிரதேச சபை

இயந்திர உபகரணங்களை வாடகைக்கு விடுவதற்கான கட்டணங்களை அறவிடல் - 2025

மீகஹகிவுல பிரதேச சபைக்கு சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகைக்கு விடுவது தொடர்பாக பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு 2025 ஆம் ஆண்டுக்கு கட்டணங்களை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) உட்பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2024, ஓகத்து மாதம் 15 ஆம் திகதி தீர்மான இலக்கம் 2024/08/15/325 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.

டி. எம். கே. டி. திசானாயக்க,
சபை செயலாளர்,
மீகஹகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹகிவுல,
2024, செத்தெம்பர் 25.

### தீர்மானம்

2025 ஆம் வருடத்திற்கு மீகஹகிவுல பிரதேச சபைக்கு சொந்தமான பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வாகனங்கள், இயந்திர உபகரண சேவைகளை வழங்குவது தொடர்பாக அதற்கு நேரொத்த நிரலில் காட்டப்பட்டுள்ள கட்டணங்களை விதித்து அறவிடுவதற்கு தீர்மானிக்கின்றேன்.

### அட்டவணை

**வாகன வாடகைக்கான கட்டணங்கள்**

| தொ. இல | வாகனம்/இயந்திர உபகரணம் | விலை (ரூ. சதம்) (ஒரு நாளுக்கு/ஒருமணி நேரத்திற்கு / 1/2 நாளுக்கு) | நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் |
|---|---|---|---|
| 01 | பெக்கோலோடர் | எரிபொருளுடன் ஒரு மணி நேரத்துக்கு ரூ. 5700.00<br>எரிபொருள் இல்லாமல் ஒரு மணி நேரத்துக்கு ரூ. 3,800.00 | ஒரு நாளுக்கு ரூ. 5800.00 |
| 02 | 08-டன் சாலை உருளை (ரோட் ரோலர்) | எரிபொருளுடன் ஒரு மணி நேரத்துக்கு ரூ. 5,000.00<br>எரிபொருள் இல்லாமல் ஒரு மணி நேரத்துக்கு ரூ. 2,500.00 | ஒரு நாளுக்கு ரூ. 5100.00 |
| 03 | 02 - டன் சாலை உருளை | எரிபொருளுடன் ஒரு மணி நேரத்துக்கு ரூ. 2,900.00<br>எரிபொருள் இல்லாமல் ஒரு மணி நேரத்துக்கு ரூ. 1,500.00 | ஒரு நாளுக்கு ரூ. 3000.00 |
| 04 | டிரெக்டர் வாகனம் (டிரெய்லருடன்) | எரிபொருளுடன் ஒரு நாளுக்கு ரூ. 11,550.00<br>எரிபொருள் இல்லாமல் ஒரு நாளுக்கு ரூ. 4,800.00 | ஒரு நாளுக்கு ரூ. 2500.00 |
| | டிரெக்டர் வாகனம் 1/2 நாளுக்கு (04 மணி நேரம்) | எரிபொருளுடன் ரூ. 5,750.00<br>எரிபொருள் இல்லாமல் ரூ. 2,400.00 | |

| தொ. இல | வாகனம்/இயந்திர உபகரணம் | விலை (ரூ. சதம்) (ஒரு நாளுக்கு/ஒரு மணி நேரத்துக்கு) | நிறுத்தி வைப்பதற்கான கட்டணம் |
|---|---|---|---|
| | டிரெக்டர் வாகனம் (பவுசருடன் மோட்டர் இல்லாமல்) | எரிபொருளுடன் ஒரு நாளுக்கு ரூ. 11,550.00<br>எரிபொருள் இல்லாமல் ஒரு நாளுக்கு ரூ. 4,800.00 | |
| | டிரெக்டர் வாகனம் (பவுசர், மோட்டருடன்) | எரிபொருளுடன் ஒரு நாளுக்கு ரூ. 12,550.00<br>எரிபொருள் இல்லாமல் ஒரு நாளுக்கு ரூ. 5,300.00 | |
| 05 | தண்ணீர் பவுஸர் டிரெக்டருடன் | தண்ணீர் இல்லாமல் 5km க்குள் ஒரு முறைக்கு ரூ. 1,300.00<br>தண்ணீருடன் 5km க்குள் ஒரு முறைக்கு ரூ. 4,300.00<br>மேலதிக 1km க்கு ரூ. 200.00 | ரூ. 1000.00 (டிரெக்டர் இல்லாமல்) |
| | தண்ணீர் பவுஸர் (டிரெக்டர் இல்லாமல் ) டிரெய்ளர் (டிரெக்டர் இல்லாமல்) | எரிபொருள் இல்லாமல் ஒரு நாளுக்கு ரூ. 1,250.00<br>(கருதிட்டத்திற்கு) | |
| 06 | டிபர் வாகனம் | எரிபொருளுடன் ஒரு நாளுக்கு ரூ. 23,000.00 (அதிகபட்சம் 70km ள்) மேலதிக 1km க்கு ரூ. 270.00<br>எரிபொருள் இல்லாமல் ஒரு நாளுக்கு ரூ. 10,000.00<br>(அதிகபட்சம் 70km) மேலதிக 1km க்கு ரூ. 55.00 | |
| 07 | மண் நசுக்கும் இயந்திரம் | எரிபொருள் இல்லாமல் ஒரு நாளுக்கு ரூ. 5000.00 (இயந்திர இயக்குனருடன்)<br>எரிபொருள் இல்லாமல் 1/2 நாளுக்கு (04 மணி நேரம்)(இயந்திர இயக்குனருடன ரூ.2500.00) | |
| 08 | கொன்கீரிட் கலவை இயந்திரம் | எரிபொருள் இல்லாமல் ஒரு நாளுக்கு (இயந்திர இயக்குனருடன்) ரூ. 8500.00<br>எரிபொருள் இல்லாமல் ஒரு நாளுக்கு (இயந்திர இயக்குனர் இல்லாமல்) ரூ.6000.00 | |

(எரிபொருள் விலைகளில் மாற்றங்கள் ஏற்படுமாயின் மேற்குறிப்பிட்ட விலைகளில் திருத்தம் செய்வது சபையின் பொறுப்பாகும்)

10 - 33/14

**மீகஹகிவுல பிரதேச சபை**

சேவை கட்டணங்களை விதித்தல் - 2025

*மீகஹகிவுல பிரதேச சபையினால் பொது மக்களுக்கு வழங்கப்படும் சேவைகளுக்காக பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் 2025.01.01 ஆந் திகதி முதல் அறவிடப்படுமென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 9(3) உட்பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2024, ஓகத்து மாதம் 15 ஆந் திகதி தீர்மான இலக்கம் 2024/08/15/326 இன் கீழ் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றேன்.*

டி. எம். கே. டி. திசானாயக்க,
சபை செயலாளர்,
மீகஹகிவுல பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மீகஹகிவுல,
2024, செத்தெம்பர் 25.

**தீர்மானம்**

*மீகஹாகிவுல பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகளின் போது 2025 ஆம் வருடத்தில் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள், சான்றிதழ்கள், அறிவித்தல்கள், அனுமதிப்பத்திரங்களுக்கு பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு அறவிடப்பட வேண்டுமென தீர்மானிக்கின்றேன்.*

**அட்டவணை**

| | வகை நூலகம் | கட்டணம் (ரூ.சதம்) |
|---|---|---|
| 01. | நூலக உறுப்பினர் விண்ணப்பப்படிவ கட்டணம் | 50.00 |
| 02. | நூலக உறுப்பினர் கட்டணம் (புதிய விண்ணப்பதாரருக்கு) | |
| | 6 வயதுமுதல் 12 வயது வரை | 100.00 |
| | 12 வயது முதல் வயது வந்த பிள்ளைகளுக்கு | 200.00 |
| | வயது வந்தவர்கள் பிரிவின் உறுப்புரிமை தொகை (அதிகார எல்லைக்குள் வசிக்கும்) | 250.00 |
| | வயதுவந்தவர்கள் பிரிவின் உறுப்புரிமை தொகை (அதிகார எல்லைக்கு வெளியே வசிக்கும்) | 300.00 |
| 03. | நூலக அபராதம் (ஒரு நாளுக்கு) | 5.00 |
| 04. | நூலக உறுப்புரிமையை புதுப்பிப்பதற்கு (வருடாந்தம்) | |
| | பாடசாலை பிள்ளைகளுக்கு | 100.00 |
| | வயதுவந்தவர்களுக்கு | 150.00 |
| | **முன்பள்ளி** | **ரூ. சதம்** |
| 01. | முன்பள்ளி அனுமதிக்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் | 100.00 |
| 02. | முன்பள்ளி பிள்ளைகளை சேர்ப்பதற்கான கட்டணம் | 2000.00 |
| | **வேறு** | |
| 01. | விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் பொது கூட்டங்களுக்கு நகர எல்லையை பாவித்தல் | 3,000.00 |
| 02. | விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் பொது கூட்டங்கள் மற்றும் வேறு நடவடிக்கைகளுக்கு | |

| வகை நூலகம் | கட்டணம் (ரூ.சதம்) |
|---|---|
| மீகஹகிவுல வார சந்தை கட்டிடம் | |
| மேல் மாடிக்கு | 4,000.00 |
| தரை தளத்திற்கு | 3,500.00 |
| 03. கரமெடிய சந்தை பூமியில் விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் பொது கூட்டங்களுக்கு இடத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு | 4,000.00 |
| 04. தல்தென சந்தை பூமியில் விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மற்றும் பொது கூட்டங்களுக்கு இடத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு | 4,000.00 |
| 05. புதிய பஸ் நிலைய பூமியை வாடகைக்கு விடுதல்.- சபைக்கு சொந்தமான பூமியின் சதுர அடி ஒன்றுக்கு ஒரு நாளுக்கு ரூ.5.00 | |
| 06. வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டணங்களை அறவிடுதல் | |
| * முச்சக்கர வண்டிகளுக்கு | 40.00 |
| * வேன்/காருக்கு | 50.00 |
| * பஸ்/லொறி வண்டிகளுக்கு | 100.00 |
| * வேறு | 60.00 |
| 07. பிட்டமாருவ சிறிய உலக முடிவை பார்ப்பதற்கு நுழைவு சீட்டை பெற்றுக்கொள்வதற்கு | |
| அனைத்து சுற்றுலா பயணிகளுக்கும் | 50.00 |
| கூடாரம், லந்தர் மற்றும் BBQ Machine (ஒரு இரவுக்கு) | |
| 04 நபர்களுக்கான கூடாரம் (Double Layer auto) | 750.00 |
| 06 நபர்களுக்கான கூடாரம் (Double Layer auto) | 1000.00 |
| 04 நபர்களுக்கான கூடாரம், லந்தருடன் (மண்ணெண்ணை இல்லாமல்) BBQ Machine (பெரிய) | 1100.00 |
| 06 நபர்களுக்கான கூடாரம், லந்தருடன் (மண்ணெண்ணை இல்லாமல்) BBQ Machine (பெரிய) | 1300.00 |
| BBQ Machine (பெரிய) | 300.00 |

மேற்குறிப்பிட்ட பொருட்களை மீண்டும் கையளிக்கும் போது தாமதக் கட்டணமாக ஒரு நாளுக்கு ரூ. 100 செலுத்தப்பட வேண்டும்.

**உற்பத்தி மற்றும் போக்குவரத்து கட்டணங்களை அறவிடுதல்**

| | |
|---|---|
| 01. கருங்கல் மற்றும் கண்ணாம்புக்கல், உடைப்பதற்கு 01 கியூப்புக்கு | 100.00 |
| 02. குவாட்ஸ் கல் உடைப்பதற்கு ஒவ்வொரு கியூப்புக்கு | 150.00 |
| 03. சிறிய மின் உற்பத்தி நிலைங்களில் உற்பத்தி செய்யப்படும் மின் அலகு 01 க்கு (பிரதான மின் கட்டமைப்புக்கு சேர்க்கப்படும்) | 0.25 |
| 04. மீகஹகிவுல பிரதேச சபை அதிகார எல்லைக்குள் மணல் குவாரியில் தோண்டப்படும் 01கியூப் மணலுக்கு | 40.00 |
| 05. மணல் குவாரியிலிருந்து போக்குவரத்து செய்யப்படும் மணல் கியூப் 01க்கு | 60.00 |

10 - 33/15

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

*அட்டவணை - 2024*

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஒற்றோபர்** | .. | வெள்ளி | 04.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.09.2024 |
| | | வெள்ளி | 11.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.09.2024 |
| | | வெள்ளி | 18.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.10.2024 |
| | | வெள்ளி | 25.10.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.10.2024 |
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 01.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.10.2024 |
| | | வெள்ளி | 08.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.10.2024 |
| | | வியாழன் | 14.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.11.2024 |
| | | வெள்ளி | 22.11.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.11.2024 |
| | | வெள்ளி | 29.11.2024 | .. | நண்பகல் 12 | வியாழன் | 14.11.2024 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 06.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.11.2024 |
| | | வெள்ளி | 13.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.11.2024 |
| | | வெள்ளி | 20.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.12.2024 |
| | | வெள்ளி | 27.12.2024 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.12.2024 |

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*